# தெவிநுவர பிரதேச சபை

# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தெவிநுவர பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சுகாதாரத் தொழிலாளிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைச் சம்பளமான ரூபா 412,038 தொகைக்காக கடன்கொடுத்தோர் நிதியோற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கந்தர உப அலுவலகத்தில் மீளாய்வாண்டிற்கு பற்றுச்சீட்டிடப்பட்ட ரூபா 878,400 தொகையான வாடகையின் பெறுமதி ஆண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 399,106 தொகையான கையிலுள்ள காசு, நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குரிய 04 செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளில் நீண்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 802,817 கூட்டுத்தொகையான மீதி தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சில வருடங்களாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 821,986 தொகையான கணக்கு மாற்றக் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,913,868 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரமும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரமும் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,358,800 ஆனமையால் ரூபா 555,068 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 145,187 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,536,710 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 75,421,844 தொகையான 11 விடயங்களுக்கான சான்றுகள் இன்மையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,702,562 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,500,599 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,366 | 1,865 | 2,625 |
| (ii) | வாடகை | 18,255 | 12,231 | 4,774 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 408 | 233 | 28 |
| (iv) | ஏனைய வருமானம் | 25,133 | 30,926 | 18,212 |

#### 2.2.2 முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,322,794 தொகையான முத்திரைக் கட்டணம் கிடைக்கவேண்டியிருந்தது.

#### 2.2.3 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான புதிய வியாபாரத்தொகுதி, பழைய வியாபாரத் தொகுதி மற்றும் கந்தர சந்தை உட்பட 111 கடைகளிலிருந்து ரூபா 3,981,474 தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்ததுடன் கணக்காய்வுத்

திகதியான 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி வரையிலும் அத்தொகையை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 1807/2 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுமக்கள் பிரதிநிதியாக கையளிக்கப்பட்ட செயற்பாடுகள்/ சபையினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பிரயாணச் செலவுப் படிகளைச் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறு எவ்வித செயற்பாடுகளும் கையளிக்கப்படாது தலைவரை உள்ளடக்கிய 9 உறுப்பினர்களுக்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 390,000 தொகையான பிரயாணச் செலவுப்படி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தென் மாகாண பிரதம அமைச்சு மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரின் 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1413/15 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 3 ஆவது விதியின் (1)(1) ஆம் பிரிவிற்கு முரணாக உறுப்பினர் படிகளைச் செலுத்தும் போது உரிய மாதத்தில் நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் செயற்குழுக் கூட்டங்களுக்குச் சமூகமளிக்காத மற்றும் 3 ஆவது விதியின் 1(iii) ஆம் பந்தியின் பிரகாரம் வைத்தியக் காரணங்களின் அடிப்படையில் விடுமுறை அல்லது 3(2) ஆம் பந்தியின் பிரகாரம் முறையான அங்கீகாரம் பெறப்படாது சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காத உப தலைவரை உள்ளடக்கிய 5 உறுப்பினர்களுக்காக ரூபா 56,500 தொகை மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.4.1 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் அதிகாரச் சட்டத்தின்

தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் தலைவரை உள்ளடக்கிய 09 உறுப்பினர்களினால் 2012 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்துகைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

2.4.2 2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் 11.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனக் கடனுக்காக வங்கி வட்டி வீதம் மற்றும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்ட 4 சதவீத வட்டிக்கிடையேயான வேறுபாடு அரசாங்கத்தின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட வட்டி அறவிடப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,065,714 தொகையான வட்டி மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

2.4.3 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது எதிர்வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு தயாரிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 வீதி விளக்குகளைப் பராமரித்தலும் கட்டுப்பாடும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வீதி விளக்குச் செலவினம் ரூபா 805,000 ஆக இருந்ததுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 885,188 ஆக இருந்தது. சபை அதிகாரப் பிரதேசத்தில் பேணப்பட்டு வருகின்ற அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்குகளின் எண்ணிக்கை 157 ஆக இருந்த போதிலும் பராமரிக்கப்படுகின்ற வீதிவிளக்குகளின் எண்ணிக்கை 2000 இனை விஞ்சியிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகா ரூபா 265,395 தொகையும், வீதி விளக்குகளைப் பராமரிப்பவரின் சம்பளமாக ரூபா 555,049 தொகையும், வீதி விளக்குகளை பராமரிக்கும் வாகனத்திற்காக ரூபா 64,745 தொகையுமாக ரூபா 885,188 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை மின்சார சபையிடமிருந்து ஆண்டிற்குரியதாக ரூபா 74,052 தொகை மாத்திரமே மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) மின்சக்தி, எரிபொருள் அமைச்சுச் செயலாளரின் 2012 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய பீஈ/01/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுச் செயற்பாடுகள் நானாவித நுகர்வோர்களின் 3 சதவீத அளவினை விஞ்ச முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபை அந்த எல்லையினை கணிப்பீடு செய்து வீதிவிளக்குளைப் பொருத்துவதற்கு இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்கு தூண்களுக்கு இலக்கம் இடுவதற்கோ அல்லது வேறு இனங்காணக்கூடிய முறைமையொன்றோ 2013 நவம்பர் 30 வரையிலும் பின்பற்றப்படாதிருந்தமையினால் வீதி விளக்குகள் தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 68 பேராக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 69 பேர் ஆகும். மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கின் பிரகாரம் பதவியணியினர் சம்பளம் மற்றும் உறுப்பினர் படிகளுக்கான செலவினம் ரூபா 18,702,855 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரினால் ரூபா 12,965,000 தொகை மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டமையினால் ரூபா 5,737,355 தொகையான வேறுபாடு சபை நிதியத்திற்கு மேலதிக செலவினம் பொறுப்பாக இருந்தது.

(ஆ) 2002 சனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் இலக்கம் 14 மற்றும் 28 இன் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய, நாட்கூலி மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்தல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 27 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 2,513,885 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த சுற்றுநிருப ஆலோசனை மீறி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டால் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட பொறுப்பினை ஏற்கவேண்டியிருந்தமையும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு